(3) அவையுரிமைப் பிரச்சினை

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் திரு. கே. எ. வகாப் பேசியதைத் தவருக வெளியிட்டிருப்பது குறித்து.

திரு. கே. எ. வகாப்: பேரவைத் தலைவர் அவர்களே, 27—11—1973 ஆம் நாள் அன்று துணை மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துக் கொண்டு நான் பேசும்போது, படித்த வாலிபர்களிடையே வேலையின்மையைப் போக்க ஆட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை போன்றவைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற பொருளில் பேசினேன். ஆனல் 28-11-1973 அன்றைய இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் நான் "பன்றிப் பண்ணைகளையும் இணைத்துப் பேசியதாக

"suggested development of poultry farming and piggery to solve unemployment"

வெளியிட்டிருக்கிறார்கள். இது என்னுடைய சமயக் கோட்பாட்டுக்கு விரோதமாக இருப்பதால் நான் சார்ந்துள்ள சமுதாயத்தில் என்னைப்பற்றி தவருன கருத்து ஏற்படுத்தி இருக்கிறது. ஆகையால், இதை ஒரு உரிமைப் பிரச்னையாகக் கொண்டு வருகின்றேன்.

இதன் காரணமாக நாட்டு மக்களிடையே என்னைப் பற்றி ஒரு தவருன கருத்து ஏற்பட்டு, என்னைப்பற்றி எனது சமுதாய மக்களே எழுப்பியுள்ள பலவிதமான எதிர்ப்புகள், கடிதங்களுக்கு நான் சமாதானம் சொல்லி சமாளித்தாகவேண்டியிருக்கிறது.' இந்தச் சட்டமன்றத்தில் அன்று நான் எவ்வளவோ பேசியிருக்கிறேன். நான் பேசியவற்றில் ஒரு வரி, இரண்டு வரி போடுகிற நிலையில் இதுமாதிரியாக தவருன எண்ணம் ஏற்படும் வகையில் நான் பேசியதாகப் போட்டிருப்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து வேறு எதுவும் கூருமல், இதுபற்றி **தீர்ப்புக்** கூற உங்களிடத்தில் விட்டுவிடுகிறேன்.

MR. SPEAKER: I have perused the official proceedings in connection with that portion of the speech of the hon. Member. He has said as follows:

"நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக இருக்கிற எத்தனையோ துறைகளில் ஈடுபட்டு செயலாற்றுங்கள் என்று சொல்கிறோம். அவர்களைப் பார்த்து கோழி வளர்ப்பில் ஈடு

1973 டிசம்பர் 3] [Mr. Speaker]

படுங்கள் என்று சொன்னுல் அவர்கள் அதை கேவலமாக நினைக்கிருர்கள். 'படித்த மாணவர்களைப் போய் கோழி வளர்க்கிறீர்களா, ஆடு வளர்க்கிறீர்களா என்று கேட்கிறீர்கள் என்று கேட்கிறீர்களே' என்று கூறுகிருர்கள்."

Hence the publication in the Indian Express dated 28th November 1973 is not a correct version of the speech of the hon. Member.

According to May, to publish distorted or incorrect version of the speeches of hon. Members is a contempt of the House. Hence this publication which is an incorrect Publication will amount to a breach of privilege.

However, I think that this is an inadvertent mistake by the newspaper and expecting that they will issue a correction to the same, I do not propose to take further action now in the matter. I also wish to appeal to the Press to be more careful in future in publishing the proceedings of the House.

(முற்பகல் 10.00)

திரு. கே. எ. வகாப் : *அதை அவர்கள் திருத்தி விடுவது நலம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *நான்தான் தீர்ப்பில் சொல்லி விட்டேனே.*

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்" என்று கேட்டு கொள்கிறேன்.*

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.